**உலகலாவிய வெளியீட்டு அடிப்படை உதவி பங்குடமை செயற்திட்டம் - 2017**

உலகலாவிய வெளியீட்டு அடிப்படை உதவி பங்குடமை செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் (ஐபீஆர்டி) மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 திசெம்பர் 27 ஆம் திகதிய ரீஎவ்099870 ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II (பீ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

உலகலாவிய வெளியீட்டு அடிப்படை உதவி பங்குடமை செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் கீழான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வீட்டுரிமையாளர் மட்டத்தில் இருக்கின்ற மற்றும் புதிய சாக்கடை வலையமைப்புக்களுடன் சாக்கடை வீட்டு இணைப்புக்கள் அதிகரிப்பதன் மூலம் கொழும்பு பெரும்பாகத்தில் குறைந்த வருமான வீட்டுரிமையாளர்களிற்கு அதன் சுகாதார சேவைகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,559 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13.10 மில்லியன் ஆக உள்ளதுடன் அதில் ரூபா 583.66 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5.08 மில்லியன் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 திசெம்பரில் தொடங்கியிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2018 திசெம்பர் 31 வரை இரண்டு தடவை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன்

நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழான பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கமைய செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காக பின்பற்றப்பட்ட வகைப்படுத்தலுக்கு இணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான

செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பித்தல்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு 2018 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 யூலை 04 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு செலுத்தப்பட்ட ரூபா 132.06 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பு பெறுகைகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 07 இல் ரூபா 27.96 மில்லியன் தொகையான மீளளிக்கவேண்டிய வெளிநாட்டு மானியம் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 233.58 மில்லியன் கிரயத்தில் எளிமைப்படுத்தப்பட்ட வழமையான நீடிப்பு மற்றும் சான்றுபடுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் ரூபா 214.89 மில்லியனாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண் டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| மானியம் | 5.08 | 583.66 | 300.00 | 0.84 | 128.10 | 2.31 | 340.76 |
| இலங்கை அரசாங்கம் | 6.80 | 835.20 | 99.74 | 0.59 | 90.07 | 3.18 | 442.23 |
| என்டபிள்யூஎஸ்டிபீ | 1.04 | 119.46 | 30.00 | 0.36 | 55.64 | 3.37 | 471.65 |
| நலனாளிகள் | 0.18 | 20.68 | - | 0.02 | 2.63 | 0.22 | 32.33 |
| **மொத்தம்** | **13.10** | **1,559.00** | **429.74** | **1.81** | **276.44** | **9.08** | **1,286.97** |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 583.66 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5.08 மில்லியன் தொகையான உடன்பட்ட மானிய பெறுகைகளில், 45.47 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துின்ற ரூபா 340.76 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.31 மில்லியன் மாத்திரம் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கி 06 ஆண்டுகள் கடந்த பின்னர் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, ஒருபகுதி சுகாதார முன்னேற்றங்கள் மீதான ஒப்பந்தங்ளில் வேலைகளின் குறைவான செயலாற்றல் காரணமாக, இருக்கின்ற செயற்திட்ட காலப்பகுதிக்குள் ஒதுக்கிய மிகுதி தொகையின் பயன்பாட்டின் சாத்தியத் தன்மை ஐயத்திற்கிடமாக இருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், நேரடி கழிவகற்றல் இணைப்புக்கள், வழமையான நீடிப்புகள் மற்றும் எளிமைப்படுத்திய கழிவு இணைப்புகள் வழங்கல் மற்றும் புதிய பன்முகப்படுத்திய வலையமைப்பகள் என்வற்றின் கூறுகளின் கீழான செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூரணமாக பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒருபகுதி சுகாதார முன்னேற்றங்களின் கூறின் கீழான நடவடிக்கைகள் ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம் மற்றும் ஒப்பந்தகாரரி குறைவான செயலாற்றல் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதுவான முன்னெற்றத்தைக் காட்டியிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகிள்றன.

(அ) ஒருபகுதி சுகாதார முன்னேற்ற வேலைகளிற்கான ஒப்பந்தங்கள் 2017 ஆகஸ்ட் 31 அளவில் தெஹிவளை, மொரட்டுவ, கொலன்னாவ மற்றும் ஜா- எல பகுதிகளில் 3,785 சுத்திகரிப்பு அலகுகளை வழங்கி பொருத்துதல் மற்றும் 1,135 மலசல கூடங்களின் நிர்மாணம் என்பவற்றிற்கு 2016 மே 16 இல் ஒப்பந்தகாரரொருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 556 சுத்திகரிப்பு அலகுகள் மாத்திரம் வழங்கி பொருத்தப்பட்டிருந்த அதேநேரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 205 மலசல் கூடங்கள் மாத்திரம் பூர்த்தியாகியிருந்தது. தொழிலாளர் படையணி பற்றாக்குறை மற்றும் சுத்திகரிப்பு அலகுகளின் இயற்கையான இரும்புருக்கு ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் போன்ற கராணங்கள் உரிய கூறின் வேலைகளின் அமுலாக்கலில் தாமதம் விளைவித்திருந்தது. இதன்விளைவால், செயற்திட்டமானது ஏற்பட்ட தாமதங்களைக் குறைப்பதற்கு சுத்திகரிப்பு அலகுகளை பொருத்துவதற்கு 2018 இல் 04 வேறு ஒப்பந்தகாரர்களிற்கு புதிதாக ஒப்பந்தங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேலும், கொலன்னாவ பிரதேச செயலக கட்டுப்பாட்டின் கீழ் வருகின்ற பகுதிகளில் வசிக்கின்ற 950 குடும்பங்களிற்கான சுகாதார வசதிகளை வழங்குவதற்கான திட்டங்கள் மற்றும் உரிய பகுதியில் 285 மலசலகூடங்களை நிர்மாணித்தல் என்பன அப்பகுதியில் வசிப்போரின் குறைவான கேள்வி காரணமாக கைவிடப்பட்டிருந்தது. செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின மீது ரூபா 2.13 மில்லியன் நிர்வாக கிரயமொன்று எற்பட்டது என அவதானிக்கப்பட்டது.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

2017 ஆகஸ்ட் 31 அளவில் அறவிடப்பட்ட வேண்டுமென எதிர்பாரக்கப்பட்ட ஒரு பகுதி சுகாதார வசதிகள் வழங்குதல் மீதான ஒப்பந்தங்களில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரர்களிற்கு 2016 யூலையில் ரூபா 88.40 மில்லியன் தொகையான தொழிலாரம்ப்பிப்பு முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 68.25 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்களின் மீதியொன்று 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்தது.